THE NEW INDIAN EXPRESS

Friday 26-09-2025

# TAMIL NADU HOMOEOPATHY MEDICAL COUNCIL

ARUMBAKKAM, CHENNAI – 106. Ph. (044-26286458)

## NOTIFICATION

Regulation 9 of the National Commission for Homoeopathy (Manner of preparation and Maintenance of National Register for practitioner of Homoeopathy) Regulations, 2022 is as follows:-

"(1) The license of a medical practitioner of Homoeopathy shall be updated after every five years in a uniform pattern by all the State Medical Councils for Homoeopathy and by National Commission for Homoeopathy for the direct registrations.

(2) Any practitioner who fails to get his license updated within six months from the due date, shall forfeit his right to practice in Homoeopathy and also forfeit the right to continue in employment based upon his license, unless updated with the payment of fees as may be laid down by State Medical Councils for Homoeopathy or with the payment of fees as specified in Schedule along with the application in Form-9 in case of direct registration by the National Commission for Homoeopathy, as the case may be:

Provided that no such updating shall be allowed, if delay is beyond two years and in such case, the license or registration shall be cancelled and fresh application for license shall be required to be obtained with applicable fee as specified in the Schedule or as laid down by the State Medical Council for Homoeopathy, as the case may be."

The Executive Committee & the Council of the Tamil Nadu Homoeopathy Medical Council have on 18/03/2025 decided to implement the above Regulation and the said decision has been approved by the Government of Tamil Nadu, Health & Family Welfare Department, Secretariat, Chennai – 9.

All Registered practitioners of Homoeopathy in the State of Tamil Nadu are hereby put on notice that henceforth the Certificate of Registration issued by the Tamil Nadu Homoeopathy Medical Council shall be valid only for 5 years from the date of issue in terms of the above Regulation.

Hence, the Medical Practitioners of Homoeopathy who are having Tamil Nadu Homoeopathy Medical Council Certificate of Registration dated more than five years prior to the date of this notification are requested to update their existing Certificate of Registration, by paying the requisite fees through online payment on or before 31/12/2025 along with the prescribed application form available in the Tamil Nadu Homoeopathy Medical Council website, www.tnhmc.com.

The Registered Practitioners are advised to renew their Registration Certificate prior to the expiry of 5 years from the date of issue to avoid penalty and cancellation of registration.

The Fee particulars are as follows:-

| Sl. No. | Fee Particular | Fees (Rs.) | GST (18%) | Total Rs. (Fee + GST) |
|---|---|---|---|---|
| 1. | Updating of Registration Certificate (License) | 3000 | 540 | **3540** |
| 2. | Updating of Registration Certificate (Beyond 6 months upto 2 years) | 3000 (2000 penalty) | 900 | **5900** |
| 3. | Restoration of Name at Tamil Nadu Homoeopathy Medical Council | 3000 (3000 penalty) | 1080 | **7080** |

Dated : 23.09.2025.

**REGISTRAR**
**TAMIL NADU HOMOEOPATHY MEDICAL COUNCIL**
**ARUMBAKKAM, CHENNAI – 106.**

DIPR/1116/DIS/2025

தினமணி

வெள்ளிக்கிழமை 26 செப்டம்பர் 2025

# தமிழ்நாடு ஓமியோபதி மருத்துவ கவுன்சில்

அரும்பாக்கம், சென்னை – 106. தொலைபேசி.(044–26286458)

## அறிவிக்கை

2022 ஆம் ஆண்டு தேசிய ஓமியோபதி ஆணையத்தின் (ஓமியோபதி மருத்துவர்களுக்கான தேசிய பதிவேட்டைத் தயாரிக்கும் முறை மற்றும் பராமரிக்கும் முறை) விதிமுறைகளின் விதிமுறை 9 இன் படி,

"(1) ஓமியோபதி மருத்துவருக்கான உரிமமானது ஒவ்வொரு ஐந்தாண்டுகளுக்கும் ஒரே சீரான முறையில் அனைத்து மாநில ஓமியோபதி மருத்துவ கவுன்சில்களாலும், தேசிய ஓமியோபதி ஆணையத்தாலும் நேரடி பதிவுகளுக்காக புதுப்பிக்கப்பட வேண்டும்.

(2) உரிய தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் தனது உரிமத்தைப் புதுப்பிக்கத் தவறும் எந்தவொரு மருத்துவரும், நேர்விற்கேற்ப, ஓமியோபதி மருத்துவத்திற்கான மாநில மருத்துவ கவுன்சிலால் நிர்ணயிக்கப்படும் கட்டணங்களைச் செலுத்துவதன் மூலம் புதுப்பிக்கப்பட்டாலன்றி அல்லது ஓமியோபதிக்கான தேசிய ஆணையத்தால் நேரடியாக பதிவு செய்யப்பட்டால் படிவம் – 9 இல் உள்ள விண்ணப்பத்துடன் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களுடன் சேர்த்து செலுத்தப்பட்டாலன்றி, ஓமியோபதியில் தொழில் செய்வதற்கான அவரது உரிமையை இழக்க நேரிடும். மேலும் அவரது உரிமத்தின் அடிப்படையில் பணியில் தொடரும் உரிமையையும் இழக்க நேரிடும்:

ஆனால், இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தாமதம் ஏற்பட்டால், அத்தகைய புதுப்பித்தல் அனுமதிக்கப்படாது. அத்தகைய சூழ்நிலையில், உரிமம் அல்லது பதிவு ரத்து செய்யப்படும் மற்றும் உரிமத்திற்கான புதிய விண்ணப்பம் நேர்விற்கேற்ப, அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது ஓமியோபதிக்கான மாநில மருத்துவ கவுன்சில் வகுத்துள்ளபடி பொருந்தக்கூடிய கட்டணத்துடன் பெறப்பட வேண்டும்."

**18.03.2025** அன்று நடைபெற்ற தமிழ்நாடு ஓமியோபதி மருத்துவ கவுன்சிலின் செயற்குழு மற்றும் கவுன்சில் கூட்டத்தில் மேற்கண்ட விதிகளை நடைமுறைப்படுத்த முடிவு எடுக்கப்பட்டு, மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத்துறை, தலைமைச் செயலகம், சென்னை 9– ஆல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஓமியோபதி மருத்துவக் கவுன்சிலால் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழ், மேற்கண்ட விதிமுறைகளின்படி, வழங்கப்பட்ட நாளிலிருந்து 5 ஆண்டுகளுக்கு மட்டுமே செல்லுபடியாகும் என்பதை, இம்மாநிலத்தில் உள்ள அனைத்து பதிவு செய்யப்பட்ட ஓமியோபதி மருத்துவர்களுக்கும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

எனவே, இவ்வறிவிக்கைக்கு முன்னர், ஐந்து ஆண்டுகளுக்கு மேல் தமிழ்நாடு ஓமியோபதி மருத்துவ கவுன்சிலின் பதிவுச் சான்றிதழ் வைத்திருக்கும் ஓமியோபதி மருத்துவர்கள், தமிழ்நாடு ஓமியோபதி மருத்துவ கவுன்சிலின் இணையதளத்தில் உள்ள வரையறுக்கப்பட்ட விண்ணப்ப படிவத்துடன் **31.12.2025** அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பின்வரும் கட்டணங்களை இணையதளம் மூலம் செலுத்தி தற்போதுள்ள பதிவுச் சான்றிதழை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். **www.tnhmc.com.**

பதிவு செய்த மருத்துவர்கள் அபராதம் மற்றும் பதிவை ரத்து செய்வதைத் தவிர்ப்பதற்காக வழங்கப்பட்ட தேதியிலிருந்து 5 ஆண்டுகள் காலாவதியாகும் முன் தங்கள் பதிவுச் சான்றிதழை புதுப்பிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

கட்டண விபரங்கள் பின்வருமாறு:–

| வரிசை எண். | கட்டணம் விவரம் | கட்டணம் (ரூ.) | GST (18%) | மொத்தம் ரூ (கட்டணம்+ GST) |
|---|---|---|---|---|
| 1. | பதிவுச் சான்றிதழை புதுப்பித்தல் (உரிமம்) | 3000 | 540 | 3540 |
| 2. | பதிவுச் சான்றிதழைப் புதுப்பித்தல் (6 மாதங்களுக்கு அப்பால் 2 ஆண்டுகள் வரை) | 3000 (2000 அபராதம்) | 900 | 5900 |
| 3. | தமிழ் நாடு ஓமியோபதி மருத்துவ கவுன்சிலில் பெயர் ரத்து செய்ததால் புதிய பதிவு செய்தல் | 3000 (3000 அபராதம்) | 1080 | 7080 |

தேதி : 23.09.2025

பதிவாளர்
தமிழ்நாடு ஓமியோபதி மருத்துவ கவுன்சில்,
அரும்பாக்கம், சென்னை – 106.

செமதொஇ/ 116 /வரைகலை/2025